# காலை முரசு

பக்கங்கள்:-25

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 08 புதன்கிழமை 24.09.2025 | அதிர்வு 54


## ஐ.நா. பொதுச் சபையில் ஜனாதிபதி இன்று உரை



ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து பயண 06




# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஐ.நா. குழுவின் அமர்வில் இலங்கை நிலைமை

## நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முழுநாள் ஆய்வு

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஐ.நா. குழுவின் 29 ஆவது அமர்வில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இலங்கை நிலைமை தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

ஜெனிவாவில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய இந்த அமர்வு எதிர்வரும் ஒக்டோபர் 2 ஆம் திகதி வரை நடைபெறுகின்றது. இதன்போது இம்முறை அது மொண்டெனேகுரு, பெனின் 04

# தமிழ் மக்களுக்கு அரசு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேறவில்லை

## சபையில் சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு



"நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கம், புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் தொராடர்பில் அரசு வழங்கிய வாக்குறுதிகள் வெறும் கானல் நீராகியுள்ளது. ஜனாதிபதியின் பதவிக் காலத்தில் ஒரு வருடம் நிறைவடைந்துள்ள நிலையில் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை. தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள்."

– இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று 04




திருகோணமலை கடற்கரையில் 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02ஆம் திகதி இடம்பெற்ற ஐந்து மாணவர்களின் படுகொலைக்கு நீதி கோரிப் போராடி வந்த - படுகொலை செய்யப்பட்ட மாணவனான ரஜீகரின் - தந்தையான டாக்டர் மனோகரன் கடந்த ஞாயிறன்று லண்டனில் காலமானார். தனது இளம் மகனின் கொடூரக் கொலைக்கு நீதி கிட்டாமலேயே அவரும் மகனிடம் போய்ச் சேர்ந்து விட்டார்.

விசேட அதிரடி படையினராலேயே இந்த மாணவர்கள் தலையில் துப்பாக்கி வைத்து மூளை சிதறச் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

தலையில் ஒரு புறம் குண்டு துளைத்து, மறுபுறம் மூளை சிதறிக் கிடக்கின்ற இந்த ஐந்து மாணவர்களினதும் முகப்படங்களை அப்போது நான் ஆசிரியராக இருந்த 'சுடர்ஒளி' பத்திரிகையில் முன்பக்கத்தில் 03



# இந்தியத் தூதுவர் - தமிழரசு எம்.பிக்கள் சந்திப்பு

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரின் இல்லமான 'இந்தியா ஹவுஸில்' நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், இரா.சாணக்கியன், வைத்தியர் ப.சத்தியலிங்கம், ச.குகதாசன், து.ரவிகரன், வைத்தியர் இ.சிறிநாத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விபத்தில் சிக்கிக் காயமடைந்த ஞா.ஸ்ரீநேசனும், வெளிநாட்டுக்குச் சென்றுள்ள க.கோடீஸ்வரனும் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை.

இதன்போது வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் தேசிய அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் பேசப்பட்டன.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ப்ளோ-அப்' பண்ணி பெரிய அளவில் வர்ணத்தில் பிரசுரித்தேன்.

பலரையும் அதிர வைத்த அந்தப் படங்கள் இலங்கை அரசை சீற்றமுற வைத்தன. என் மீது காட்டமாக இருந்த இலங்கைப் பாதுகாப்புத் தரப்பின் ஆவேசம் கடைசியில் திருகோணமலையில் எனது செய்தியாளராக இருந்த சுகிர்தராஜன் சுட்டுக் கொல்லப்படும் கொடூரம் வரை நீண்டது.

இன்று வரை இலங்கை அரசு படைகளின் கொடூரத்திற்கு ஒரு சான்றாக அடையாளப்படுத்தப்படும் அந்த படுகொலைகள் பற்றிய அதிர்வுகள் இன்னும் தொடர்வதற்கு சுகிர்தராஜனின் அந்தப் படங்களும் காரணம் எனலாம்.

சர்வதேச ரீதியில் இலங்கை அரசுக்கு எதிராகப் பெரும் கண்டனங்களை உருவாக்கிய இந்தச் சம்பவம் தொடர்பிலும் சேர்த்து விசாரணை நடத்துவதற்கு, அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ, நீதியரசர் உடலகம ஆணைக் குழுவை அமைத்தார். அந்த ஆணை குழுவின் நடவடிக்கைகளை உலகுக்கு பெரிய விடயமாக காட்டுவதற்காக, ஆணைக் குழுவின் அமர்வுகளை நேரடியாகப் பார்வையிடுவதற்கு சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவை (International Independent Group Of Eminent Persons என்ற அமைப்பை) அனுமதித்தார்.

ஆனால், அந்த விசாரணைகளைப் பார்வையிட்ட சர்வதேச மாண்புமிக்கோரான இந்தியாவின் முன்னாள் நீதியரசர் பி.என்.பகவதி உட்பட ஆஸ்திரேலியா, கனடா, பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், நெதர்லாந்து, அமெரிக்கா, பங்களாதேஷ், சைப்ரஸ், ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றின் மூத்த நீதியரசர்களைக் கொண்ட மாண்புமிக்கோர் குழு இந்த விசாரணைகள் கண்துடைப்பு நாடகம், திருகோணமலை மாணவர்கள் ஐவர் கொல்லப்பட்ட விடயம் உட்பட்ட வன்முறைகளை விசாரிப்பதற்கான அரசியல் பற்றுறுதியோ, நேர்மையோ இந்த அரசுக்கு கிடையாது என்று பகிரங்கமாக அறிவித்துவிட்டு தமது அவதானிப்புப் பொறுப்பிலிருந்து வெளியேறியது.

அப்போது அந்த மாண்புமிக்கோர் குழு சுட்டி காட்டிய விடயங்களில் ஒன்று இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் வழக்கு தொடுநர் பொறுப்பின் சுயாதீன தன்மை பற்றிய குறைபாடாகும்.

சட்டமா அதிபர் திணைக்களம் ஒரு புறம் அரசைப் பாதுகாத்துக் கொண்டு, மறுபுறம் குற்றம் இழைத்த தரப்பை தண்டனைக்கு உட்படுத்தும் நடவடிக்கையை எடுக்கும் தனது பணியில் முரண்பட்ட போக்கில் செயற்படுகின்றது, அரசாங்கப் படைகள் மற்றும் அரசாங்கத் தரப்புகள் இழைத்த குற்றங்களை மூடி மறைக்க சட்டமா அதிபர் திணைக்களமும் துணை போகின்றது என்று அந்த மாண்புமிக்கோர் குழு குற்றம் சுமத்தி இருந்தது.

அந்தக் குற்றச்சாட்டின் உண்மைத் தன்மை நேற்றும் இலங்கை உயர் நீதிமன்றத்தில் ஒரு தடவை நிரூபணமாகி இருப்பது இப்போது கவனிக்கத்தக்கதாகி இருக்கின்றது.

நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு இலத்திரனியல் விசா வழங்கும் விடயம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை நிறைவேற்றத் தவறிய குற்றத்துக்காக முன்னாள் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு நாயகமான ஹர்ஷா இலுக்பிட்டியாவுக்கு இலங்கை உயர்நீதிமன்றம் நேற்று மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.

நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கு இலத்திரனியல் விசா வழங்கும் பொறுப்பை மிக உயர்ந்த கட்டணத்துக்கு - அதிகாரப்பூர்வ ஏலங்களைக் கோராமல் - வி.எவ்.எஸ். என்ற நிறுவனத்திற்கு வழங்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசின் முடிவுக்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகள் ரவூப் ஹக்கீம், சம்பிக்க ரணவக்க ஆகிய மூவரும் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தமையோடு, அந்த வழக்கின் சார்பில் தாங்களே முன்னிலையாகி நீதிமன்றத்தில் வாதிட்டும் இருந்தனர்.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் இந்த வழக்கை ஒட்டி உயர்நீதிமன்றம் ஓர் இடைக்கால உத்தரவைப் பிறப்பித்தது. இலத்திரனியல் விசா வழங்கும் பொறுப்பை வெளி நிறுவனத்துக்கு மிக உயர்ந்த கட்டணத்தில் 'அவுட் சோர்ஸ்' செய்வதற்கான அமைச்சரவையின் முடிவை தற்காலிகமாக நிறுத்தி வைக்க உத்தரவிட்ட நீதிமன்றம், பழைய முறையை - முந்தைய - விரைவான மின்னணு பயண அங்கீகார செயல்முறையை - மீண்டும் உடனே செயல்படுத்த உத்தரவிட்டது.

ஆனால், உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவை நிறைவேற்றாமல் முன்னாள் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு நாயகமான ஹர்ஷா இலுக்பிட்டிய இழுத்தடித்தார் என்று கூறப்படுகின்றது. பழைய முறைமையை மீண்டும் கொண்டுவர மாதக் கணக்கில் காலம் எடுக்கும் என்றார் அவர்.

இந்த நடவடிக்கை நீதிமன்ற அவமதிப்பு என மனுதாரர்கள் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகளான ரவூப் ஹக்கீம், சம்பிக்க ரணவக்க ஆகிய மூவரும் உயர்நீதிமன்றத்தில் முறையிட்டனர்.

இந்தச் சமயத்தில்தான் சட்டமா அதிபர் தரப்பு தன் கைவரிசையை காட்ட முயற்சித்தது. குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு நாயகமான ஹர்ஷா இலுக்பிட்டிய சரியாகத்தான் செயல்பட்டார் என்ற நிலைப்பாட்டை சட்டமா அதிபர் எடுக்க முனைந்த போதே, இந்த விடயத்தில் அரசு நலன் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் முரணியல் நிலைப்பாட்டைப் பின்பற்றுவதாக உயர் நீதிமன்றம் கருதியது. அதனை அடுத்து, இவ்விடயத்தில் ஹர்ஷா இலுக்பிட்டிய மீது வழக்குத் தொடுக்கும் பொறுப்பை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து விலக்கிக் கொண்ட உயர்நீதிமன்றம், வழக்கின் மனுதாரரான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தது.

முன்னாள் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு நாயகமான ஹர்ஷா இலுக்பிட்டியவுக்கு தண்டனை வழங்கப்பட்ட வழக்கில், வழக்குத் தொடுநராக - குற்றம் சாட்டும் தரப்பாக - சட்டமா அதிபருக்கு பதிலாக - மனுதாரரான சட்டத்தரணி சுமந்திரனே செயற்பட்டார் என்பது முக்கியமான விடயம்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டு அரசு உயர் அதிகாரி ஒருவருக்கு எதிராக இருந்த போதும், அந்த விடயத்திலேயே சட்டமா அதிபரின் நிலைப்பாடு நலன் முரணியல் கொண்டது என்று உயர்நீதிமன்றம் தீர்மானிக்கும் நிலைமை ஏற்பட்டதும், சட்டமா அதிபருக்கு பதிலாக குற்றம் சுமத்தும் பணியை முன்னெடுத்த சுமந்திரன் அதனை வெற்றிகரமாக நிறைவேற்றி இருக்கின்றமையும் இந்த வழக்கு தீர்ப்பின் மூலம் உறுதியாகி இருக்கின்றது.

அரசு அதிகாரிக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கிலேயே சட்டமா அதிபர் திணைக்களம் இப்படி நலன் முரணியல் நிலையில் செயல்படலாம் என்று உயர் நீதிமன்றம் கருதுமானால், அரசு, படைகள் மற்றும் அரசு தரப்புக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுகள், மனித குலத்துக்கு எதிரான கொடுரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் போன்ற விடயங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பங்கு பணி எப்படி இருக்கும் என்பதை எவரும் இலகுவாக ஊகித்துக் கொள்ள முடியும். அதனால் தான் இந்த விடயத்தில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக, சுயாதீனமான தரப்புகள் தேவை என்று வலியுறுத்தப் படுகின்றது.

நேற்று உயர் நீதிமன்றம் முன்னாள் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு நாயகமான ஹர்ஷா இலுக்பிட்டியவுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கிய வழக்கும், சட்டமா அதிபர் அல்லாத ஒரு சுயாதீன தரப்பை வழக்கு தொடுநராகக் கொண்டு யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கு மற்றொரு சான்றாகும்.

⋆ ⋆ ⋆

கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின்நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஏற்கனவே இரண்டு தடவைகள் ஏற்பாடு செய்யப்பட்டு, ஒத்திவைக்கப்பட்ட நிலையில், நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரின் இல்லமான 'இந்தியா ஹவுஸில்' நடைபெற்றது.

விபத்தில் சிக்கி காயம் அடைந்துள்ள சிறிநேசனும், வெளிநாட்டுக்குச் சென்றுள்ள கோடீஸ்வரனும் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன் சுமார் 10 நிமிடத்திற்கு மேல் தாமதமாக வந்தார்.

திருகோணமலை மாவட்ட எம்.பி. குகதாசனும், வன்னி மாவட்ட எம்.பி. ரவிகரனும் இடம் மாறி இந்தியத் தூதரத்துக்குச் சென்று விட்டு, பின்னர் சரியான இடத்தைத் தேடிப் பிடித்து, சுமார் 20 - 25 நிமிடங்கள் தாமதமாக வந்து சேர்ந்தனர்.

ஆக, சாணக்கியன், வைத்தியர் சிறிநாத், வைத்தியர் சத்தியலிங்கம் ஆகிய மூவர் மாத்திரமே சந்திப்பு தொடங்கும் போது இந்தியா ஹவுஸில் இருந்தனர்.

மற்றவர்கள் இல்லாத காரணத்தினால் சாணக்கியன் எம்.பி. நாடாளுமன்றக் குழு தலைவர் போல விடயங்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## இரகசியம் பரகசியம்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை கையாள முற்பட்டமை மற்ற எம்.பிக்களுக்கு சற்று எரிச்சலாக இருந்ததாகத் தெரிகிறது.

மருத்துவர் சிறிநாத் எம்.பி. கிழக்கில் அதிகம் சீனத் தரப்பின் ஊடுருவல், பங்களிப்பு, ஈடுபாடு குறித்து அடிக்கடி - அதிகம் - பேசியமை இந்தியத் தூது வரை அதிருப்தியிலும் எரிச்சலிலும் ஆழ்த்தியதாகத் தெரிகிறது.

'சீனா உதவுகின்றது அல்லது தலையிடுகின்றது என்பதற்காகப் போட்டிக்கு நாங்கள் எதுவும் செய்யப் போவதில்லை. அது எங்களுக்கு விடயமும் அல்ல. வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு உரியதை செய்ய வேண்டும் என்ற நிலைப்பாடு இந்திய அரசுக்கு உண்டு. அதன் அடிப்படையில்தான் விடயங்களைச் செய்வோம்' என்று சாரப்பட சிறிநாத்துக்குச் சற்று சூடாகக் கொடுத்தார் இந்தியத் தூதுவர் எனத் தெரிகிறது.

சாணக்கியன் தம்பாட்டில் கிழக்கு அபிவிருத்தி, வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தல் போன்றவை குறித்து தமது கருத்துக்களை வரிசைப்படுத்தினார் எனக் கூறப்பட்டது.

அதேபோல ரவிகரனும் முலைத்தீவு உதவி திட்டங்கள் பற்றி பேச, வைத்தியர் சத்தியலிங்கமும் தம்பாட்டுக்கு தமது தரப்பு கோரிக்கைகளை முன்வைத்தார்.

சானக்கியன், சிறிநாத், சத்தியலிங்கம் மூவரும் ஆங்கிலத்தில் தமது கருத்துகளை எடுத்து வைத்தனர்.

ஸ்ரீதரன் எம்பி லேட்டாக வந்து தமது கட்சிக்கு 'ஸேம் சைட்' கோல் அடித்தார்.

நல்லாட்சி காலத்தில் தமது தமிழரசு கட்சி நடந்து கொண்ட விதத்தை அவர் கடுமையாக விமரிசித்தார். இந்தியாவோடும் அப்போது தமது கட்சி சேர்ந்து செயல்படவில்லை என்றார் அவர்.

'தள்ளி நின்றார்கள். மாகாண சபை தேர்தலை எதிர்கொள்ள அஞ்சி ரணிலோடு சேர்ந்து மாகாணசபைத் தேர்தல் சட்டத்தை ரத்து செய்து, எங்களுக்கு நாங்களே சூனியம் வைத்துக் கொண்டோம்' என்ற மாதிரி சிறிதரன் கருத்து வெளியிட்டார்.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை இல்லாமல் செய்ய ரணிலின் அரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவைப்பட்டது. தாமும் சேர்ந்து அந்த வாக்கை அளித்து, மூன்றில் இரண்டு பங்கு ஆதரவை உறுதிப்படுத்தி விட்டு, இப்போது தமது கட்சியை இந்திய தூதர் முன்னிலையில் அவரே வைது கொண்டார்.

குகதாசன் எம்.பி. வழமை போல 'பிடிச்சு வைச்ச பிள்ளையார்' போல எதுவும் பேசாமல் நல்ல பிள்ளை நாடகத்தை ஆடி விட்டு வந்தார்.

மொத்தத்தில் பக்கத்து நாட்டுத் தூதுவருடனான பேச்சுவார்த்தையைக் காத்திரமாக மாற்றுவதில் தமிழரசு நாடாளுமன்ற எம்.பிக்கள் மொத்தத்தில் கோட்டை விட்டுவிட்டனர் என்றே தோன்றியது.

⋆ ⋆ ⋆

---

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவகம் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசு ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்துள்ளது. இந்த நாட்டில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த ஒரு வருட காலத்தில் தீர்வைப் பெற்றுக்கொடுக்கவில்லை. திருப்தியடையும் ஒரு தீர்வைக் கூட அரசு முன்வைக்கவில்லை என்றே குறிப்பிட வேண்டும்.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தில் ஒரு வருடம் நிறைவடையும் போது ஒரு வருடத்தில் என்ன செய்தீர்கள் என்று எவரும் கேள்வி கேட்கக் கூடாது என்பதற்காகவே இந்த மாதம் முதல் வாரத்தில் வடக்கு மற்றும் ஏனைய மாகாணங்களில் அவசர அவசரமாக அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அவமானப்படக் கூடாது என்பதற்காகவே அவசரமாக ஒருசில அபிவிருத்திகள் ஆரம்பிக்கப்பட்டன.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு வழங்குவதற்கு அரசு ஆரம்ப கட்ட நடவடிக்கைகளைக் கூட மேற்கொள்ளவில்லை. காணி விடுவிப்பு பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாக அரசு குறிப்பிட்டது. ஆனால், இதுவரையில் அந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி மற்றும் மேய்ச்சல் தரை பிரச்சினைக்கும்தீர்வுவழங்கப்படவில்லை. மட்டக்களப்பு, மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதற்கு இந்த அரசு எவ்வித கலந்துரையாடலையும் மேற்கொள்ளவில்லை. அத்துமீறிய மேய்ச்சல்காரர்கள் எமது மக்களின் நிலங்களை ஆக்கிரமித்துள்ளார்கள். இந்தப் பிரச்சினைக்கு வர்த்தமானி அறிவித்தல் ஊடாகத் தீர்வு காணுமாறு தொடர்ந்து கோரிக்கை விடுக்கின்றோம்.

இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் உள்ள காணிகளை விடுவிப்பதாக வாயால் குறிப்பிடப்படுகின்றது. ஆனால், செயலில் ஒன்றுமில்லை. வளவளத்துறை திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பொது மக்களின் காணிகளை விடுவிப்பதாக சுற்றாடல் துறை அமைச்சர் வடக்குக்கு வந்து குறிப்பிட்டார். மூன்று மாதங்கள் கடந்தும் ஏதும் நடக்கவில்லை.

எமது மக்கள் கடந்த காலங்களில் மனித உரிமை மீறல் கொடுமைகளுக்கு உள்ளானார்கள். இதற்கு இந்த அரசு வழங்கிய பதிலை எம்மால் ஏற்க முடியாது.

யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ள சர்வதேச விளையாட்டு மைதானக் காணியில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன. செம்மணி விவகாரத்தில் எவ்வித நடவடிக்கையும் இல்லை.

மாகாண சபைத் தேர்தலை இந்த வருடம் நடத்துவதாக ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் குறிப்பிட்டார்கள். தற்போது 2026 என்று குறிப்பிடுகின்றார்கள்.

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்குரிய சட்டமூலத்தை விரைவாக நிறைவேற்ற எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கம், புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றி எவ்வித பேச்சும் நடைபெறவில்லை. எமது மக்கள் கடந்த காட்டிலும் தற்போது பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த கால ஆட்சியாளர்கள் வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க முடியாது என்று வெளிப்படையாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், நீங்கள் நம்ப வைத்து ஏமாற்றியுள்ளீர்கள். இதனைத் தொடர்ச்சியாக ஏற்க முடியாது." – என்றார்.

---

## வலிந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் இலங்கை ஆகிய மூன்று நாடுகளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நிலைமை தொடர்பாக மதிப்பாய்வு செய்யும்.

இந்த அமர்வில் வலுக்கட்டாயமாகக் காணாமல்போனவர்களுக்கு அஞ்சலி செலுத்துதல் இடம்பெறும். இந்த ஆண்டு தொடக்கத்தில் ஜெனிவாவில் நடைபெற்ற கட்டாயமாக காணாமல் போதல் தொடர்பான முதல் உலக மாநாட்டின் காணொளி காட்சிப்படுத்தப்படும்.

இலங்கை தொடர்பான விடயம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் நண்பகல் 1 மணி வரை, பின்னர் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை என மொத்தம் ஆறு மணி நேரம் நடைபெறும்.

அரசு சாரா நிறுவனங்களிடமிருந்து அந்தந்த நாட்டு அறிக்கைகள் மற்றும் பிற சமர்ப்பிப்புகளைப் பெற்றுள்ள இந்தக் குழு, சம்பந்தப்பட்ட நாட்டின் பிரதிநிதிகளுடன் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்கும்.

ஜெனிவாவாவின் பலாய்ஸ் வில்சனில் உள்ள முதல் மாடி மாநாட்டு அறையில் இந்த அமர்வு நடைபெறும். அனைத்து பொதுக் கூட்டங்களும் அங்கீகாரம் பெற்ற பத்திரிகையாளர்களுக்கும், ஐ.நா. வலை தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்புக்கும் திறந்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.




# நாளை முதல் 29 வரை செம்மணி வளைவில் சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டம்!

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கம் ஏற்பாடு

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரி நாளை 25 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை அடையாள சுழற்சி முறையான உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்ச்சியாக செய்ய வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

இந்தப் போராட்டத்தை செம்மணி வளைவு பகுதியில் செய்யவிருக்கிறோம். அனைத்து மாவட்டங்களிலும் உள்ள எமது உறவுகள் அங்கு வருகை தந்து ஒன்றிணைய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

வியாழக்கிழமை காலை 9 மணி முதல் போராட்டம் செம்மணி வளைவு பகுதியில் ஆரம்பமாகி இரவு பகலாக தொடர்ச்சியாக 29ம் திகதி மாலை 4 மணி வரை நடைபெறும்.

தமிழ் மக்கள் அனைவரும் இதனை ஒரு பொது அழைப்பாகக் கருதி அனைவரும் பங்கேற்று போராட்டத்தை வலுப்படுத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் அறுபதாவது கூட்டத்தொடரில் 22 தொகுதி தொடக்கம் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான கூட்டம் நடைபெற்று வருகிறது. அந்த மாநாட்டில் எமக்கு – எமது உறவுகளுக்கு – நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும். இதுவரை காலமும் நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

மனிதாபிமானத்தை பேணுகின்ற மனித உரிமை பேரவையிலே எமக்கான நீதியினை வழங்குவதற்கு அனைத்து நாடுகளும் புவியியல் அரசியலைத் தவிர்த்து முன்வர வேண்டும். ஏனைய நாடுகள் மற்றும் அனுசரணை வழங்கும் நாடுகளிடமும் நாம் கோரிக்கையை விடுக்கிறோம்.

தமிழ் மக்களுக்கு நிகழ்ந்தது இனப்படுகொலை என்பதை நாம் இங்கே ஈழத்தில் வாழும் தமிழர்களாக தெரிவித்து கொள்கிறோம். எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு சர்வதேச நீதி வழங்கப்பட வேண்டும் என்பதற்காக இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் – என்றனர்.

# போதைப்பொருள் வியாபாரியான மகன் கைதான இடத்தில் 3 வாரத்தில் அவரின் தந்தை அதே ரகப் பொருளுடன் கைது!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகரில் ஐஸ் போதைப் பொருள் வியாபாரியான கருவப் பங்கேணியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டு, மூன்று வாரத்தில் அதே பகுதியில் வைத்து 21 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார். அவரை எதிர் வரும் 25ஆம் திகதிவரை பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய மட்டு. நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

பொலிஸ் நிலைய பெரும் குற்றத் தடுப்பு பிரிவு அதிகாரி ஜெயசிங்கவுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் பொலிஸ் கான்ஸ்டபிள் சமரபந்து தலைமையில் ஜயசிங்க, ரதன் உட்பட்ட குழுவினர்



கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நகர் பகுதியில் உள்ள கண்ணகை அம்மன் கோயில் வீதியில் மாறு வேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது பை ஒன்றுடன் நடந்து வந்த இந்த நபரை கண்காணிப்பில் ஈடுபட்ட பொலிஸார் சுற்றி வளைத்து மடக்கிப் பிடித்து சோதனை செய்தனர். இதன் போது வியாபாரத்துக்காக எடுத்துச் செல்லப்பட்ட 21 கிராம் ஐஸ் போதை பொருளுடன் அவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் கருவப்பங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடையவர் எனவும், இவரின் 22 வயதுடைய மகனையும் மற்றும் லயன்ஸ் கிளப் வீதியைச் சேர்ந்த 24 வயதுடைய மற்றொருவரையும் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் ஐஸ் போதை பொருளுடன் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் அதே பகுதியில் வைத்து அந்த இளைஞரின் தந்தை யாரை பொலிஸார்அதே ரக போதைப் பொருளுடன் கைது செய்துள்ளனர்.

# நம்பிக்கையில்லாப் பிரேரணை ஏன் நிராகரிக்கப்பட்டது?

## காரணங்களைச் சபையில் சமர்ப்பிக்குமாறு சபாநாயகரிடம் சஜித் பகிரங்க வேண்டுகோள்

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணையைநிராகரிப்பதற்கு ஏதுவாக அமைந்த காரணங்களைச் சபைக்குச் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர்,

"பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தொடர்பில் எமக்குத் தனிப்பட்ட எந்தப் பிரச்சினைகளும் இல்லை. அவர் தற்போது பதில் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்து வருகின்றார். அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்ததன் பிற்பாடு, அதனை நிராகரிப்பதற்கு அடிப்படையாக இருந்த செயலாளர்கள்



குழாமின் அறிக்கைகள் மற்றும் சட்டமா அதிபரின் அறிக்கை உள்ளிட்ட ஏனைய விடயங்களை இந்தச் சபைக்குச் சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன்." – என்றார்.

# எங்கள் மக்களினுடைய சம்மதம் இல்லாமல் புதிய அரசமைப்பைக் கொண்டு வர முடியாது

## இப்படிக் கூறுகின்றார் சிவாஜிலிங்கம்

எங்கள் மக்களின் சம்மதம் இல்லாமல் ஒரு புதிய அரசமைப்பை கொண்டு வர முடியாது. நாங்கள் எல்லாவற்றையும் செய்வோம் என்ற மமதையை விட்டு முழுமையான தீர்வுக்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே எம்.கே.சிவாஜிலிங்கம் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

2009 இறுதி யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்பு 16 ஆண்டுகளாக நீதிக்காக தமிழினம் ஏங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில் தமிழர் தரப்பிலேயே பலரையும் குழப்பம் விதத்தில் சிலரின் நடவடிக்கை காணப்படுகிறது.

சர்வதேசம் எதையுமே செய்யாது என்ற விசமப் பிரசாரத்தின் மூலம் அழுத்தம் இல்லாத சூழலை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

நான் 15 தடவைக்கு மேல் ஜெனிவாக் கூட்டத்தொடருக்கு சென்றவன் என்ற அடிப்படையில் கூறுகிறேன். நாட்டிலிருந்து கோரிக்கை வர வேண்டும், உள்நாட்டு மக்கள் போதிய அளவு அக்கறை காட்டாவில்லை, புலம்பெயர் நாடுகளில் இருந்து வரும் அழுத்தம் மட்டும் போதாது



என்ற கருத்துப்பட அங்கு சொல்லி இருந்தார்கள்.

நடைபெற்றது இனப்படுகொலை என்று சொல்வதற்கு போர் முடிவடைந்து ஏறக்கூடிய ஏழு ஆண்டுகள் எடுத்தன. 2009 இல் போர் முடிவடைந்து 11 வருடங்கள் கடந்தே 3 பிரதான கட்சிகள் இணைந்து இனப்படுகொலை என கையெழுத்திட்டு ஐழ்நாவுக்கு கடிதம் அனுப்பின.

2015 இல் வடக்கு மாகாண சபை இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்றிய போதும் கூட – தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் வடக்கு மாகாண சபை இருந்த போதும் – அந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளாத நிலையில் இருந்தது.

இனப்படுகொலையை நிரூபிக்க முடியாது என சொன்னவர்கள் தற்போது செம்மணிக்கு பிறகு இனப்படுகொலை நிருபிக்கப்படலாம் என்ற கருத்தை எங்கள் தரப்பில் இருந்து சொல்கிறார்கள்.

நாங்கள் போராடுவதால் – அழுத்தம் கொடுப்பதால் – எதுவும் ஆகாது என்று இல்லை. எங்களுக்கு அதிர்ஷ்டம் இருப்பது போல செம்மணி மனித புதைகுழி தோண்டும் போது இருநூறுக்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் இன்று வெளிவந்துள்ளன. இதை குழப்புவதற்கு பலர் செயற்பட்டாலும் நாங்கள் அதனை வெளிப்படுத்த தயாராக இருக்க வேண்டும்.

இனிமேல் இனப்படுகொலை நடைபெறாது என்பதை உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் ரோம் உடன்படிக்கையில் இலங்கை கையெழுத்திட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கு பிராந்தியங்களை ஏற்று ஐ.நாவின் பொறிமுறை ஊடாக எமக்கான பரிகாரநீதி வழங்கப்பட வேண்டும். சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் எமக்கு தீர்வு வருவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கின்றது.

எங்கள் மக்களின் சம்மதம் இல்லாமல் ஒரு புதிய அரசமைப்பைக் கொண்டு வர முடியாது. நாங்கள் எல்லாவற்றையும் செய்வோம் என்ற மமதையை விட்டு முழுமையான தீர்வுக்கு அரசாங்கம் முன்வர வேண்டும். சர்வதேசத்திடம் நீதியை கேட்கவும் தொடர்ந்து போராடவும் தமிழ் மக்கள் தொடர்ந்து பயணிக்க வேண்டும் – என்றார்.

### ஐ.நா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நேற்று அமெரிக்காவின் ஜோன் எப். கெனடி சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தார். அவருக்கு ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கை நிரந்தரப் பிரதிநிதியும் முன்னாள் பிரதம நீதியரசருமான ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய உள்ளிட்டோரினால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

இன்று அமெரிக்க நேரப்படி பிற்பகல் 3.15 மணிக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபையில் உரையாற்றவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் மற்றும் பல உலகத் தலைவர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

அத்துடன், அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களுடனான சந்திப்பிலும் அவர் பங்கேற்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தும் இணைந்து கொண்டுள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# புகையிலை, மது பாதிப்பு

இலங்கையில் மது மற்றும் புகையிலைப் பாவனையினால் சுகாதார, சமூக மற்றும் பொருளாதார துறைகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது. இவற்றினால் வருடாந்தம் சுமார் 70 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர்.

இந்த அதிர்ச்சித் தகவலை தென் கிழக்குப் பல்கலைக்கழகக் கலை மற்றும் கலாசார பீடத்தின் பதில் பீடாதிபதியும் அரசியல் அறிவியல் துறைத் தலைவருமான கலாநிதி எம். அப்துல் ஜப்பார் அங்கு நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

உலகளவில் ஆண்டுதோறும் சுமார் 26 லட்சம் மரணங்கள் மது மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படுகின்றன என உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டிருக்கிறது. இலங்கையிலும் சுகாதாரம், சமூக மற்றும் பொருளாதார துறைகளில் மது மற்றும் புகையிலைப் பாவனை பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. எமது நாட்டில் வருடாந்தம் சுமார் 50,000 பேர் மதுப் பாவனையினாலும் 20,000 பேர் புகையிலைப் பாவனையினாலும் அநியாயமாக இறக்கின்றனர் என அவர் சுட்டுகின்றார்.

“இலங்கையில் தினசரி சராசரியாக 42 பேர் புகையிலை பாவனை காரணமான பிரச்சினைகளினால் உயிரிழக்கின்றனர். உண்மையில் புகையிலை, சிகரெட் விற்பனை மற்றும் வரி விதிப்புகளினால் பெரும் வருமானம் கிட்டுவதாக அரசு கருதுகிறது. அரசாங்கத்துக்கு 92.9 பில்லியன் ரூபா சிகரெட் போன்றவற்றின் வரி மூலம் கிடைத்தாலும், அதனால் ஏற்படும் சுகாதார செலவுகளுக்காக அரசு செலவிடும் தொகை 240 பில்லியன் ரூபாவைத் தாண்டுகின்றது.'' - என அங்கு உரையாற்றிய இன்னொரு பிரமுகரான சம்பத் டி சேரம் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

அதுபோல மதுவினால் அரசுக்கு 165 பில்லியன் ரூபா வருமானம் கிடைக்கும் அதே சமயத்தில், அதனால் ஏற்படும் சுகாதார பிரசசினைகள் மற்றும் சிக்கல்களுக்காக அரசாங்கம் 237 பில்லியன் ரூபாவை செலவிடுகின்றது என்கிறார் அவர்.

இப்படிப் பார்த்தால் மது மற்றும் புகையிலை பாவனையினால் மக்கள் மாத்திரம் அல்லர், நாடும் கூட விடயம் விளங்காமல் வினையை விலை கொடுத்து வாங்கி அவற்றை சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றது என்பது திண்ணம்.

இலங்கையில் 15 முதல் 21 வயதுக்குட்பட்ட இளைஞர்களில் 11.6 சதவீதமானோர் புகைபிடிக்கின்றனர் எனவும், 18 சதவீதமானோர் மதுபானம் அருந்துகின்றனர் என்றும் மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் மேற்கொண்ட ஆய்வில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

“புகை மற்றும் மதுவை முதன்முறையாக பயன்படுத்தத் தொடங்கும் பெரும்பாலான சந்தர்ப்பங்கள் சமூக நிகழ்வுகளில் இடம்பெறுகின்றன. இதே போன்ற ஆய்வுகளில், நண்பர்கள் மற்றும் சமூகவட்டத்தின் அழுத்தமும் தூண்டுதலும் இந்த நடத்தை உருவாகும் முக்கியக் காரணிகளாக காணப்படுகின்றமை தெளிவாகுகின்றது.

“ஊடகம் மற்றும் பிற தளங்கள் வழியாக புகையிலை நிறுவனங்கள் மேற்கொள்ளும் பல்வேறு விளம்பரங்கள், பாதிக்கப்படக்கூடிய குழுக்களில் இவர்களது தயாரிப்புகளுக்கு நேர் மறையான பார்வையை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன'' - என்று ஆய்வறிக்கைகள் கூறுகின்றன.

சிறியோரும் இளையவர்களும் புகையிலை மற்றும் மதுவின் பக்கம் திரும்புவதை ஆரம்பக் கட்டத்திலேயே தடுத்து நிறுத்துவதுதான் இந்தப் பிரச்சினையைக் கையாள்வதில் சிறப்பான எத்தனமாக இருக்கும்.

இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க வலுவான அரசுக் கொள்கைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தேசிய ரீதியிலான திட்டங்கள், கருத்தரங்குகள் போன்றவையும் கனகாத்திரமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

# திருமலை 5 மாணவர்கள் கொலைக்கு நீதி கோரிய தந்தை ஒருவர் உயிரிழப்பு



## மகனின் பிறந்த தினத்தில் சோகம்

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி, திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களில் ஒருவரான தனது மகனுக்கு நீதி கோரி வந்த தந்தை ஒருவர் உயிரிழந்தார்.

ரஜீகர் மனோகரன் என்ற மாணவனின் படுகொலைக்கு நீதி கோரிப் போராடி வந்த, அவரின் தந்தையான வைத்தியர் காசிப்பிள்ளை மனோகரன் (வயது 84) என்பவரே, எவ்வித நீதியும் கிடைக்காமல் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அரச பயங்கரவாதத்தில் கொல்லப்பட்ட ரஜீகர் மனோகரனின் பிறந்தநாள் கடந்த ஞாயிற்றுக்கிழமையாகும். மகனின் பிறந்த தினத்திலேயே, அவருக்கு நீதி கோரி வந்த தந்தை காலமாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அநுர அரசு முன்னெடுக்கும்

# சிறந்த வேலைத்திட்டங்களுக்கு நாங்கள் ஆதரவு வழங்குவோம்



## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

"அநுர அரசு சிறப்பான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தால் அதற்கு ஆதரவளிக்கப்படும்."

– இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நேற்று ஐக்கிய மக்கள் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் முடிவடைந்த பின்பு ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.எதிரணிகளின் ஒன்றிணைவு பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்கு, "அது நல்லது தானே." – என்று இராதாகிருஷ்ணன் எம்.பி. பதிலளித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசின் ஓராண்டு நிறைவு எப்படி என்ற கேள்விக்கு, "நல்லது, அநுர அரசு நல்ல வேலை களைச் செய்தால் ஆதரவளிப்போம். தவறான விடயங்களைச் செய்தால் அவற்றை எதிர்ப்போம்." – என்று இராதாகிருஷ்ணன் எம்.பி. பதிலளித்தார்.

# அநுரவும் சிறை செல்ல வாய்ப்பு

## இப்படி மிரட்டுகின்றார் கம்மன்பில

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும், அரசின் சில அமைச்சர்களும் எதிர்காலத்தில் சிறை செல்லக்கூடும் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"சொத்து மற்றும் பொறுப்பு பற்றிய விபரங்களை வெளிப்படுத்துவதற்காக நாங்கள் கொண்டு வந்த சட்டத்தால் தேசிய மக்கள் சக்தி அரசு கடும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது.

இந்தச் சட்டத்தின் ஊடாக தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய விபரங்களை வெளிப்படுத்த நேரிடும் என்று தேசிய மக்கள் சக்தியினர் கடந்த காலங்களில் அறிந்திருக்கவில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, 2024ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிரிட்டனுக்குச் சென்றிருந்தார். இந்தப் பயணத்துக்கான செலவு விவரங்கள் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விவரங்களில் குறிப்பிடப்படவில்லை.


அதேபோல் 2024ஆம் ஆண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் என்ற அடிப்படையில் இந்தியா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்திருந்தார். இந்தப் பயணங்களுக்கான செலவு விவரங்களும் வெளிப்படுத்தப்படவில்லை.

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்படி, தமக்குப் பரிசாகவோ அல்லது வேறு வழிமுறைகளிலோ ஏதேனும் சலுகைகள் கிடைக்கப் பெறுமாயின் அதன் விவரங்களையும் சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விவரத் திரட்டில் உள்ளடக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



எனவே, சொத்துக்கள் மற்றும் சலுகைகளை மறைத்த குற்றத்துக்காக எதிர்காலத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சிறை செல்ல வாய்ப்புள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் ஒரு வருட கால ஆட்சியில் நாட்டில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அரசியல் பழிவாங்கல்கள் மாத்திரமே இடம்பெறுகின்றன." – என்றார்.



# தமிழ் மக்களின் கையொப்பங்களுடன் கூடிய கோரிக்கை ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியிடம்!

அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றிணைந்து கையெழுத்துப் போராட்டத்தில் பெற்றுக் கொண்ட கையொப்பங்களும் அதனுடன் சேர்ந்த மகஜரும் நேற்றைய தினம் கொழும்பில் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி திரு மார்க் அண்ட்ரே பிரான்ஸேயிடம் கையளிக்கப்பட்டன.

நேற்று செவ்வாய் மாலை 3:30 மணியளவில் கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் இது தொடர்பான சந்திப்பு நடைபெற்றது. இக்கையொப்பங்களுடன் தமிழ் தேசிய கட்சிகளின் தலைவர்கள் ஒன்றி ணைந்து கையொப்பமிட்ட கடிதமும் கையளிக்கப்பட்டது.

தமிழ் தேசிய கட்சிகளின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும், சமத்துவ கட்சியின் செயலாளர் நாயகம் சந்திரகுமாருன், கட்சிகளின் ஒருங்கிணைப்பாளரான குருசுவாமி சுரேந்திரனும் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருக்கு எழுதப்பட்டு, ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கும், பாதுகாப்புச் சபைக்கும், மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் பிரதியிடப்பட்டுள்ள இக் கடிதத்தில் நீதியரசர் திரு சீ.வீ. விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. சார்பில் திரு செ. கஜேந்திரன், செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், முருகேசு சந்திரகுமார் மற்றும் எஸ். நவீந்திரா (வேந்தன்) ஆகியோர் கையொப்பம் இட்டு இருந்தனர்.

காலம் காலமாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அட்டூழிய குற்றங்களுக்கான நீதியை விரைந்து நிலைநாட்டவும், பிரதானமாக செம்மணி உட்பட எமது வடக்கு, கிழக்கு தாயகத்தில் அடையாளப்படுத்தப் படும் மனிதப் புதைகுழிகளில் தொடர்ந்தும் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும், கண்டெடுக்கப்படும் ஆதாரங்களை உறுதிப்படுத்துவும், சர்வதேச மேற்பார்வையுடன் கூடிய ஆலோசனை, தொழில்நுட்பம், நிதி, பாதுகாப்பு என பல கோரிக்கைகள் இக்கடிதத்தில் உள்ளடங்கியிருந்தன. அந்த விடயங்கள் நேரடியாகவும் ஐ.நா. ஒருங்கிணைப்பாளரிடம் இச்சந்திப் பின்போது தமிழ் மக்களின் பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. கிட்டத்தட்ட ஒரு மணி நேரமாக இச்சந்திப்பு நீடித்தது.







# திலீபன் திருவுருவப் படம் தாங்கிய ஊர்திப் பவனி நேற்று புங்குடுதீவில்

தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி பவனி நேற்று புங்குடுதீவில் இடம்பெற்றது.

தியாக தீபம் திலீபனின் 38 வது நினைவு தினத்தை முன்னிட்டு தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் யாழ் புங்குடுதீவு பகுதியில் தியாக தீபம் திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்திபவனி ஆரம்பமாகி நடைபெற்றது.

தியாகி தீபம் திலீபனின் உருவப் படத்திற்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது

ஊர்தி புங்குடுதீவு பகுதியின் மக்கள் அஞ்சலிக்காக முக்கியமான இடங்களில் தரித்து நிறக ஆங்காங்கே அஞ்சலி நிகழ்வுகளை மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஊர்தி பவனிக்கு யாழ் தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டாளர்கள், வேலணை பிரதேச சபை உறுப்பினர்கள், புங்குடுதீவு பிரதேச பாடசாலை மாணவர்கள், மக்கள் ஆகியோர் உணர்வு ரீதியாக அஞ்சலி செலுத்தினர்.













# பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்ரா மிரட்டுகிறார் தமிழரசுப் பிரதேச சபைத் தலைவர் குற்றச்சாட்டு!

(எஸ்.கீதபொன்கலன்)

"பிரதி அமைச்சர் அருண் ஹேமச் சந்ரா எனக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுத்தார். இதுபற்றி நான் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன்" என்று நேற்றுக் காலை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைத் தலைவர் வெ.சுரேஸ் குமார் ஊடகங்களுக்கு தகவல் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில. –

சென்ற 17 ஆம் திகதி பிரதி அமைச்சரின் தொலைபேசியில் இருந்து அழைப்பு ஒன்று வந்தது.அதில் "இதுவரை நீங்கள் எப்படி இருந்தீர்களோ தெரியாது.இனி சொறிச்சேட்டைகள் விடக்கூடாது" என்று அச்சுறுத்தும் வகையில் அவர் கதைத்தார். இது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஏன் அவர் என்னுடன் இவ்வளவு மோசமாக கதைக்க தொடங்கினார் என எனக்கு விளங்கவில்லை. இந்த உரையாடல் நடந்த போது எனக்கு அருகில் எமது கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இருந்தார். உடனடியாக இந்த விடயம் பற்றி அவருக்கு நான் கூறினேன். அதை செவி மடுத்த அவர் இந்த தொலைபேசி அச்சுறுத்தல் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு எனக்கு ஆலோசனை வழங்கினார். அதன்படி எனது வசிப்பிடத்திற்குரிய நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் நான் முறைப்பாட்டை பதிவு செய்தேன். ஆனால் இன்று வரை பொலிஸ் தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பின்னர் எமது பிரதேச சபை உறுப்பினர்கள் இவ்விடயத்தை அறிந்து கொண்டனர். அதனை அடுத்து சபை அமர்விற்கு செல்வதற்கு முன்னர் சபைக் கட்டடத்திற்கு வெளியில் நானும் ஏனைய உறுப்பினர்களும் கறுப்புப்பட்டி அணிந்து எமது கண்டனத்தை வெளிப் படுத்துவது என்று தீர்மானித்தோம். அதன்படி எமது கண்டனத்தை பிரதி அமைச்சருக்கு வெளிப்படுத்தி உள்ளோம்."

"கழிவு நீர் வாய்க்கால் அமைக்கவும், கழிவுகளை அகற்றுவதற்கும் தமிழரசுக் கட்சி அமைக்கப்படவில்லை. மாறாக எமது மக்களின் உரிமைகளையும், சுயநிர்ணயத்தையும் வென்றெடுக்கவே எமது கட்சி செயற்பட்டு வருகின்றது. பிரதேச அபிவிருத்தியில் நாம் கட்சி பேதமின்றி சகல கட்சி உறுப்பினர் களுடன் இணைந்தே செயற்படுகின்றோம். நிர்வாக செயற்பாடுகளில் நாம் கட்சி பேதம் பார்ப்பதில்லை. தேர்தல் காலத்தில் கட்சியின் கொள்கையின் படி நாம் ஏனைய கட்சிகளை விமர்சித்தோம். ஆனால் சபை அமைக்கப்பட்ட பின்னர் கட்சி பேதமின்றி அனைத்து உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை நிறைவேற்ற இணைந்து செயற்படுகின்றோம். அனைத்து அங்கத்தவர்களும் எனக்கு பூரண ஆதரவை தருகின்றனர். இந்நிலையில் பிரதி அமைச்சரின் தனிப்பட்ட முறையிலான அச்சுறுத்தல் மிகவும் கண்டிக்க தக்கது.

அமைச்சர்களும் சாதாரண பொது மக்களும் சமமானவர்களே என்று ஜனாதிபதி கூறுகின்றார். யாரும் அமைச்சர் என்பதற்காக விசேடமானவர் அல்லர் என்கிறார் அவர். ஆனால் நடைமுறையில் அது இல்லை என்றே நாங்கள் கருத வேண்டியுள்ளது. – என்று கூறினார்.

பிரதேச சபை கட்டடத்திற்கு முன்பாக கூடி தமது கண்டனத்தை வெளிப் படுத்திய பின்னர் தலைவரும் ஏனைய அனைத்து கட்சிகளின் உறுப்பினர்களும் சபை அமர்விற்காக சபா மண்டபத்திற்கு சென்றனர்.







# தேர்தலில் தமிழரசைத் தோற்கடிக்க முடியாதவர்களே இப்போது அதிகாரத்தைப் பயன்படுத்தி மிரட்டுகின்றனர்

## முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஏ.எம்.பஷீர் தெரிவிப்பு

**(எஸ்.கீதபொன்கலன்)**

"இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தேர்தலில் தோற்கடிக்க முடியாதவர்கள், தமது அதிகாரத்தை பயன்படுத்தி எமது சபைத் தலைவரை அச்சுறுத்துவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது" என்று திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஏ.எம்.பஷீர் கூறினார்.

பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ராவால் பிரதேச சபைத்தலைவர் வெ.சுரேஸ்குமார் அச்சுறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று நடைபெற்ற கவவீர்ப்புப் போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இக் கருத்தை முன்வைத்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில் –

"சபைத் தலைவர் என்பவர் குறித்த சபைப் பிரதேசத்தின் முதல் குடிமகன். அவரது பதவி கண்ணியத்திற்குரியது. அவர் கௌரவமானவர். அவரது கௌரவத்தை பாதிக்கும் வகையில் பிரதி அமைச்சர் அச்சுறுத்தலில் ஈடுபட்டுள்ளார். இது கண்டனத்திற்குரியது.

இந்தப் பிரதே சபையில் நாம் பல வேறு கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தினாலும், தலைவர் அனைவரையும் அரவணைத்தே நிர்வாகத்தை நடத்தி செல்கின்றார். எம்மிடையே எமது கட்சிகளின் கொள்கைகள் சார்ந்து மாற்றுக் கருத்துகள் இருக்கலாம். ஆனால் மக்கள் நலன் சார்ந்து சபையில் தீர்மானங்கள் முன்வைக்கப்படும் போது கட்சி பேதமின்றி நாம் அதனை ஆதரிக்கின்றோம். அத்தகைய புரிந்துணர்வான சூழ்நிலையில் சபை தலைவரால் நடத்தி செல்லப்படுகின்றது. இவ்வாறான நிலையில் பிரதி அமைச்சரின் செயல் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று.

இப்பிரதேச சபை எல்லைக்குள் மூவின மக்களும் வாழ்கின்றனர். அவர்களைசமமானகண்ணோட்டத்துடனேயே தலைவர் நடத்துகின்றார்.

தேசிய மக்கள் சக்தியினர் தேர்தல் காலத்தில் கூறினார்கள் கரிமலையூற்று பள்ளிவாசலை விடுவிப்போம், முத்து நகர் காணிகளை விவசாயிகளுக்கு மீள பெற்றுக் கொடுப்போம் என்று. ஆனால் இன்று வரை அது நடக்கவில்லை. மக்கள் இன்று நடுத்தெருவில் நிற்க்கின்றனர். இவ்வாறான மக்கள் நலன் சார்ந்த விடயங்களை தீர்ப்பதற்கு தமது நேரத்தை செலவிடாமல், பிரதேச சபைத் தலைவருக்கு அச்சுறுத்தல் விடுக்க தமது நேரத்தை செலவு செய்கின்றார்கள். – என்று அவர் கூறினார்.





# மூன்று லட்சம் மெட்ரிக் தொன் சோளத்தை அறுவடை சமயம் இறக்குமதி செயத அரசு!

## முட்டாள்தனத்தை விமர்சிக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர்

சோளத்திற்கு ரூ.140 உத்தரவாத விலை வழங்கப்பட்ட போதிலும், அரசாங்கம் 3 இலட்சம் மெட்ரிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்ததால் விலை ரூ.120 முதல் 115 வரை குறைந்து காணப்படுகின்றது. இதன் விளைவாக, சோளச் செய்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் உதவியற்ற நிலைக்கு மாறியுள்ளமையை அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களுக்கு அண்மையில் மேற்கொண்ட விஜயத்தின் போது அறிய முடிந்தது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சோளத்தை பயிரிட்டு அறுவடையைப் பெற்றுக் கொள்ள சுமார் 110 நாள்கள் தேவைப்படுகின்றன. என்றாலும், இந்தச் செயல்பாட்டில் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக, 80 நாள்கள் 70 நாள்கள் ஆன சோளச் செடிகளோடு ஒரு கிலோ ரூ. 25க்கு விற்கப்பட்டன. இவை, விவசாயிகள் என்னிடம் நேரடியாக தெரிவித்த விடயங்களாகும். இந்த பயிர்களை எறும்புகள், குரங்குகள் மற்றும் முள்ளம்பன்றிகளில் இருந்து இன்னும் 40 நாள்களுக்குப் பாதுகாப்பதற்குப் பதிலாக, விலை குறைந்துள்ள காலத்திலயே செடிகளோடு விற்றால் கொஞ்சமேனும் இலாபம் ஈட்ட முடியும் என்பதனால் இவ்வாறு விற்றுள்ளனர் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டு உரங்களுக்கு தடை வந்தபோது கூட, 178,000 மெட்ரிக் தொன் சோளமே நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டன. மகாவலி பகுதிகளில் அறுவடையானது சாதாரண பகுதிகளை விட மூன்று மடங்கு அதிகமானதாகும். 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் சேனா புழு தாக்கப் பிரச்சினையின் போதும் இவ்வளவு தொகை இறக்குமதி செய்யப்படவில்லை. அரசாங்கம் வாக்குறுதியளித்த உத்தரவாத விலையும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. இதன் காரணமாக, விவசாயிகள் 70 நாள்களே ஆன தங்கள் சோளப் பயிர்களை செடியோடு விற்றுள்ளனர். சோளம் அறுவடை காலத்தில் 3 இலட்சம் மெட்ரிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்ய அரசாங்கம் எடுத்த இந்த நடவடிக்கை, உள்நாட்டில் சோளத்தை உற்பத்தி செய்து வரும் விவசாயிகளுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இப்போதாவது இதற்கான முறையான திட்டத்தை வகுத்துச் செயற்படுங்கள்.- என்று எதிர்க்கட்சித் தலைவர் அங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

# கடமை நிறைவேற்று அதிபர்கள் தொடர்பில் கவனம் செலுத்தும்படி அவர்கள் கோரிக்கை

(கி.வசந்தன்)

கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களாக நியமனம் பெற்று தற்போது அதிபர் தரத்தில் பணியாற்றி வரும் அதிபர்கள் தொடர்பில் கல்வி அமைச்சு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கஷ்ட மற்றும் அதி கஷ்ட பாடசாலைகளில் காணப்பட்ட அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களாக நேர்முகத் தேர்வுகளில் மூலமாக அதிபர்கள் நியமிக்கப்பட்டமையோடு அவர்கள் 2012 ஆம் ஆண்டு எட்டாம் மாதம் எட்டாம் திகதி அதிபர் தரத்துக்குள் உள்வாங்கப்பட்டு நிரந்தர அதிபர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் இவ்வாறு நியமிக்கப்பட்ட அதிபர்களுக்கான நிர்வாகக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை. இடமாற்றச் செயற்பாடுகளில் அவர்களுக்கான நீதியான பொறிமுறை இன்மையாலும் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2013 ஆம் ஆண்டு கல்வி சேவை தாபனத்தின் மேலதிக செயலாளர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் கையொப்பமிட்டு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்ட போது 'மிகை ஊழியர்' என்ற அடிப்படையில் இந்த அதிபர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டதன் அடிப்படையில் வட மாகாணத்தைச் சேர்ந்த 75 அதிபர்களும் இலங்கை பூராகவும் நூற்றுக்கணக்கான அதிபர்களுமாக தொடர்ந்தும் கொடுப்பனவுகள் மற்றும் இடமாற்றங்களில் புறக்கணிக்கப்பட்டு வருகின்ற நிலைமை காணப்பட்டு வருகின்றது. இ அதிபர்கள் 2018 ஆம் ஆண்டு அதிபர் தரம் இரண்டுக்கும், 2024 ஆம் ஆண்டு அதிபர் தரம் ஒன்றுக்கும் தரம் உயர்த்தப்பட்ட போதிலும் தகுதியான பாடசாலைகளில் அதிபர்களாக கடமையாற்றுவதற்கு வாய்ப்பு வழங்காமல் மாகாண கல்வி அமைச்சு தொடர்ந்து புறக்கணித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இது தொடர்பில் கல்வி அமைச்சு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனம் செலுத்தி தமக்கான நீதியைப் பெற்றுத் தர வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை பின் தங்கிய பிரதேசங்களில் கடமையாற்றும் இவ்வாறான அதிபர்கள் தொடர்ந்தும் மன உளைச்சலுக்கு உள்ளாகி வருகின்றமை தொடர்பிலும் கல்வி அமைச்சு கவனம் செலுத்துமா என்கின்ற கேள்வியையும் அவர்கள் எழுப்பியுள்ளனர்.



# இலங்கையில் மது, புகையிலைப் பாவனையினால் சுகாதார,சமூக,பொருளாதாரப் பாதிப்புகள் அதிகம்

## வருடாந்தம் 70 ஆயிரம் பேரின் உயிரிழப்புக்கு இவையே காரணமாம் தென்கிழக்குப் பல்கலைக அரசியல் துறைத் தலைவர் ஜப்பார் தகவல்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

இலங்கையில் மது மற்றும் புகையிலைப் பாவனையினால் சுகாதாரம், சமூக மற்றும் பொருளாதார துறைகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுவதுடன் இவற்றினால் வருடாந்தம் சுமார் 70 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என்று தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை மற்றும் கலாச்சார பீடத்தின் பதில் பீடாதிபதியும் அரசியல் அறிவியல் துறைத் தலைவருமான கலாநிதி எம். அப்துல் ஜப்பார் தெரிவித்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை மற்றும் கலாச்சார பீடத்தின் சமூகவியல் துறை ஒருங்கிணைத்த "ADIC - இரண்டாம் கட்டத் திட்டம்" தொடர்பான ஆரம்ப செயலமர்வு, கடந்த திங்கட்கிழமை பீடத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இங்கு பிரதான உரை நிகழ்த்திய கலாநிதி எம். அப்துல் ஜப்பார் மேலும் தெரிவிக்கையில் -

உலகளவில் ஆண்டுதோறும் சுமார் 2.6 மில்லியன் மரணங்கள் மது மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படுகின்றன என உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டிருக்கிறது. இலங்



கையிலும் மது, சுகாதாரம், சமூக மற்றும் பொருளாதார துறைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. எமது நாட்டில் சுமார் 50,000 பேர் மதுப் பாவனையினாலும் 20,000 பேர் புகையிலை பாவனையினாலும் அநியாயமாக இறக்கின்றனர்.

இந்தப் பிரச்சினையை சமாளிக்க வலுவான அரசுக் கொள்கைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் அவசியமாகின்றன. இவ்வாறான திட்டங்கள் மாணவர்களுக்கு அறிவும் விழிப்புணர்வும் அளிக்கும் ஒரு அரிய வாய்ப்பாக இருக்கும். - என்றார்.

ADIC நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சம்பத் டி. சேரம் உரையாற்றுகையில், இலங்கையில் மதுபானம், புகையிலை மற்றும் பிற போதைப் பொருள்களின் பரவல் நிலைமை, சமூகத்தில் ஏற்படும் விளைவுகள் மற்றும் அவற்றைத் தடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் தேசிய அளவிலான நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இலங்கையில் ஏற்படும் மரணங்களில் 83 வீதம் அசாதாரண நோய்கள் காரணமாக ஏற்படுகின்றன. அதற்கான முக்கிய அபாயக் காரணிகள் புகையிலை, மதுப் பயன்படுத்தல், ஆரோக் கியமற்ற உணவு மற்றும் உடற்பயிற்சி குறைவு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தினசரி 42 பேர் புகையிலை காரணமாக உயிரிழக்கின்றனர் என்றும், அரசுக்கு வருவாயாக 92.9 பில்லியன் கிடைத்தாலும் சுகாதாரச் செலவு 240 பில்லியனைத் தாண்டுவதாகவும் அவர் தெரிவித்தார். அதேபோல், மதுவால் வருடத்திற்கு 237 பில்லியன் ரூபாய் செலவாக, வருவாய் 165 பில் லியன் ரூபாய் மட்டுமே என்றும் குறிப் பிட்டார்.

இந்நிகழ்வில் ADIC திட்டப் பணிப்பாளர் அமரநாத் தின்னா, தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி எம்.எம். றிஸ்வான் உள்ளிட்டோரும் உரையாற்றினர்.



# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவு நிகழ்வு

(கே எ ஹமீட்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழாவுன் வருடாந்தப் பொதுக்கூட்டமும் எதிர்வரும் 27 ஆம் திகதி மருதானை கொழும்பு 10 ல் உள்ள அமானி கிராண்ட் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் கலாபூஷணம் அல்-ஹாஜ் என் எம் அமீன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நலிந்த ஜெயதிஸ்ஸ பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்

கௌரவ அதிதியாக இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார். இம்மாநாட்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் நடப்பு வருடத்திற்கான புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற உள்ளது.



# உன் கனவு பசியோடு இருக்கின்றது திலீபா...!

**தமிழ் மக்களுக்காக உண்ணா நோன்பு இருந்து தனது உயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்தக் கவிதை பிரசுரிக்கப்படுகின்றது.**

ஊரெழுவில் இராசையாவின்
தவப் புதல்வனாய் அவதரித்த
பார்த்தீபா – நீ தமிழ்
இனத்தின் மீது கொண்ட பற்றால்
போராட புறப்பட்டாய் – அண்ணன்
கரத்தைப் பலப்படுத்தி
மக்களுக்காய் குரல் கொடுத்தாய்

இந்திய – இலங்கை கூட்டு
சதியால் அமைதிப்படையென
இந்திய இராணுவம் – கால் பதித்தது
தமிழினத்தின் குரலை
நசுக்க முற்பட்ட போது
காந்திய தேசத்துக்கே
பாடத்தைப் புகட்டினாய்

ஐந்தம்சக் கோரிக்கைகளை
கையிலெடுத்து – பன்னிரு நாள்கள்
நல்லூரான் தேரோடும் வீதியில்
மக்கள் கண்கலங்கி நிற்க
தனித்து பசித்திருந்து
அணு அணுவாக மக்களுக்காய்
உயிரை துறந்து தியாக தீபமானாய்

முப்பத்தெட்டு ஆண்டுகள்
உருண்டோடி விட்டாலும்
உன் நினைவு எம்மை விட்டு
அகலவில்லை – பூச் சொரிந்து
நினைவு கூருகின்றோம்
விதையாகிப் போனாலும் – உன்
கனவும் பசியோடு இருகின்றது திலீபா!



- கீர்த்தன் மகேந்திரன் -









## ஆசிய அபிவிருத்தி வங்கியின்

# குடிநீர் விநியோகத் திட்ட அதிகாரிகள் வடக்கு ஆளுநருடன் கலந்துரையாடல்

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் குடிநீர் விநியோகத் திட்ட அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகத் திட்டத்தின் நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. திட்டத்தின் சில தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

எதிர்காலத்தில் யாழ்ப்பாணம் நகரத்தின் கழிவுநீர் முகாமைத்துவம் தொடர்பான திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி வழங்குவதற்கு திட்டமிடுவதாகவும், இது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணம் குடிநீர் விநியோகத் திட்டத்தில் இந்த விடயமும் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் அது கைவிடப்பட்டிருந்த நிலையில் மீளவும் செயற்படுத்துவ தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் யாழ். குடாநாட்டுக்கான இரண்டாம் கட்ட குடிநீர் விநியோகத் திட்டத்துக்கு உதவுவதற்குத் தயாராக உள்ளதாகவும், இது தொடர்பில் அரசுடன் கலந்துரையாடி வருவதாகவும் ஆளுநருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள், யாழ்ப்பாணம் குடிநீர் விநியோகத் திட்டத்தின் பிரதிநிதிகள், ஆளுநரின் செயலாளர் மற்றும் ஆளுநரின் இணைப்புச் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.







## 71 ஆவது தேசிய விருது;

# நடிகர் மோகன்லாலுக்கு குடியரசுத் தலைவர் தாதா சாகேப் பால்கே விருதை வழங்கினார்

இந்தியாவின் உயரிய திரைப்பட விருதான 'தாதா சாகேப் பால்கே' விருது, மலையாள நடிகர் மோகன்லாலுக்கு வழங்கப்பட்டது. டில்லியில் விஞ்ஞான் பவனில் நடைபெற்ற 71 ஆவது தேசிய திரைப்பட விருது விழாவில் குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, அவருக்கு இந்த விருதினை வழங்கி சிறப்பித்தார்.

இந்தியத் திரைத்துறையில் வாழ்நாள் சாதனை புரிந்தவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தாதா சாகேப் பால்கே விருதை, மத்திய அரசு வழங்கி வருகிறது. இந்நிலையில், கடந்த 2023 ஆம் ஆண்டுக்கான விருது நடிகர் மோகன்லாலுக்கு கடந்த 20 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

அதன்படி நேற்று இந்த விருது வழங்கப்பட்டது. அப்போது, மோகன்லாலின் மனைவி சுசித்ரா மோகன்லால் உட்பட அரங்கில் இருந்த அனைவரும் எழுந்து நின்று கைகளைத் தட்டி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பலத்த கைத்தட்டல்களுக்கு மத்தியில் மோகன்லால், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவிடம் இருந்து தாதா சாகேப் பால்கே விருதினைப் பெற்றார். விழாவில் மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கலந்து கொண்டார்.

# வெள்ளத்தில் மிதக்கும் கொல்கத்தா; மழை காரணமாக 7 பேர் உயிரிழப்பு



கொல்கத்தாவில் பெய்த கனமழையால், மின்சாரம் தாக்கி 7 பேர் உயிரிழந்தனர். நகர் முழுவதும் மழை வெள்ளம் சூழ்ந்துள்ளநிலையில், இயல்புவாழ்க்கை முற்றிலும் முடங்கியுள்ளது.

வடமேற்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக கொல்கத்தாவில் திங்கட்கிழமை இரவு முதல் இடைவிடாமல் கனமழை பெய்தது. இதன் காரணமாக, சாலைகளில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதனால் நகரத்தில் உள்ள பல வீடுகள் மற்றும் குடியிருப்பு வளாகங்களுக்குள் தண்ணீர் புகுந்தது. கொல்கத்தா முழுவதும் போக்குவரத்து சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டதால், பல்வேறு பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான பயணிகள் சிக்கித் தவித்தனர்.

கொல்கத்தாவில் பெய்த கனமழையால் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சர்வதேசவிமானநிலையத்தில்விமானப்போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் 30 இற்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. மேலும், கொல்கத்தாவின் மோசமான வானிலை காரணமாக பல்வேறு விமானங்களின் புறப்பாடு மற்றும் வருகை நேரங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டன.

“மோசமான வானிலை காரணமாக இதுவரை 30 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. மேலும் 31 விமானங்கள் தாமதமாகியுள்ளன” என்று கொல்கத்தா விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.




# தி.மு.கவின் அறிவாலயத்தை ஜெயலலிதா காப்பாற்றினார்

## எடப்பாடி பழனிசாமி தெரிவிப்பு

தி.மு.கவின் தலைமையகமான அண்ணா அறிவாலயத்தை காப்பாற்றிக் கொடுத்ததே முன்னாள் முதல்வர் ஜெயலலிதாதான் என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் தேர்தல் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, நேற்று குன்னூர், உதகமண்டலம் சட்ட மன்றத் தொகுதிகளில் மக்களைச் சந்தித்தார்.

இதன்போது அவர் உரையாற்றுகையில்,

"கனிமொழி பேசுகிறார். அ.தி.மு.க. கட்சி அலுவலகம் டில்லியில், உள்துறை அமைச்சர் அமித் ஷா வீட்டில் இருக்கிறது என்று பேசுகிறார். அந்தம்மா கனவு கண்டதா என்று தெரியவில்லை. கனிமொழி அவர்களே, அ.தி.மு.க. அலுவலகம் சென்னையில்தான் இருக்கிறது. வந்து பாருங்கள். நீங்களும் ஆள் வைத்து உடைத்துப் பார்த்தீர்கள். ஒன்றும் நடக்கவில்லை. ஏனென்றால் அ.தி. மு.கவை எம்.ஜி.ஆர், ஜெயலலிதா என்ற இரு தெய்வங்களும் அருள் புரிந்து காத்தருள்கிறார்கள்.

அ.தி.மு.கவை உடைக்க, பிளக்க சதி செய்தீர்கள், எந்த விதத்திலும் அதிமுக செயல்படக்கூடாது என்பதற்காக நீதிமன்றத்தின் மூலமாக வெவ்வேறு விதத்தில் முயற்சி செய்தீர்கள், அத்தனையும் அ.தி.மு.க. தொண்டர்களால் முறியடிக்கப்பட்டது. இது தொண்டர்கள் நிறைந்த கட்சி, உழைப்பால் உயர்ந்த கட்சி, ஸ்டாலின் அவர்களே நீங்கள் எத்தனை அவதாரம் எடுத்தாலும் அ. தி.மு.கவை அசைக்கவோ ஆட்டவோ முடியாது. அ.தி.மு.கவை அழிக்க எத்தனையோ பேரை கொம்பு சீவிக் கொண்டிருக்கிறீர்கள், எத்தனையோ வழியில் சோதனையை ஏற்படுத்துகிறீர்கள். அத்தனை சோதனையும் தூள் தூளாக்கப்படுகிறது." என்றார்.

# பிரான்ஸ் ஜனாதிபதியை வீதியில் தடுத்து நிறுத்தி 30 நிமிடங்கள் நடக்க வைத்த அமெரிக்க பொலிஸ்



பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், அமெரிக்க பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

ஐ.நா. தலைமையகத்தில் தனது உரைக்குப் பிறகு பிரான்ஸ் ஜனாதிபதி நியூயோர்க் வழியாக காரில் சென்று கொண்டிருந்த நிலையில், ட்ரம்பின் வாகன அணிவகுப்பு காரணமாக வீதிகள் மூடப்பட்டமையால் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் பிரான்ஸ் ஜனாதிபதி, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை தொலைபேசியில் அழைத்துப் பேசிய போதும், அந்த முயற்சி பயனளிக்கவில்லை என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனால் அவர், பல நிமிடங்கள் காத்திருந்த பிறகு வீதி, பாதசாரிகளுக்கு மாத்திரம் திறக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. பொதுச் சபையின் 80 ஆவது அமர்வில் கலந்து கொள்வதற்காக இம்மானுவேல் மக்ரோன் நியூயோர்க் சென்றுள்ள நிலையில், அவர் பிரான்ஸ் தூதரகத்திற்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தபோது அவரது வாகனம் தடுத்து நிறுத்தப்பட்டது.

இதனால் பிரான்ஸ் தூதரகத்துக்கு சுமார் 30 நிமிடங்கள் வீதியில் நடந்து செல்ல வேண்டிய நிலைமை பிரான்ஸ் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது.





# ரஷ்ய போர் விமானங்களை எதிர்கொள்ள பிரித்தானியா, நேட்டோ படைகள் தயார்



பிரித்தானியா மற்றும் நேட்டோ படைகள் ரஷ்ய போர் விமானங்களை எதிர்கொள்ள தயாராக இருப்பதாக பிரித்தானிய வெளியுறவு செயலாளர் அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில், ஐரோப்பாவின் வான்வெளியில் அத்துமீறி நுழையும் ரஷ்ய போர் விமானங்களை எதிர் கொள்ள பிரித்தானியா மற்றும் நேட்டோ படைகள் தயாராக இருப்பதாக தெரி விக்கப்படுகின்றது.

இது தொடர்பாக நியூயோர்க்கின் ஐ.நா பாதுகாப்பு ஆணையகத்திடம் பேசிய அவர், நேட்டோ பிராந்தியத்திற் குள் அனுமதியின்றி நுழையும் ரஷ்ய விமானங்களுக்கு எதிராக தங்கள் இராணுவ படை உடனடி நடவடிக்கை எடுக்கும் என திட்டவட்டமாக தெரிவித் துள்ளார்.

அத்தோடு, ரஷ்யாவின் அண்மைக் கால நடவடிக்கைகள் பொறுப்பற்றதாக வும் மற்றும் அபாயகரமானதாகவும் இருப் பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரஷ்யாவின் இத்தகைய நடவ டிக்கை ஐரோப்பாவின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மையை குலைக்கும் முயற்சி என்றும் அவர் இதனை குறிப்பிட்டுள் ளார்.

இத்தகைய தொடர் செயல்கள் ரஷ்யா மற்றும் நேட்டோ படைகளுக்கு இடையிலான நேரடி ஆயுத மோதலுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் எச்சரித்–துள்ளார்.

# திறன்மிகு வல்லுநர்களுக்கு அழைப்பு விடுக்கிறது சீனா




சர்வதேச அளவிலான திறன்மிகு வல்லுநர்களை அமெரிக்கா நிராகரிக்கத் தொடங்கி உள்ள நிலையில், அத்தகைய வர்களை தங்கள் நாட்டுக்கு வருமாறு சீனா அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் கூ ஜகுன்,

“உலகமயமாக்கப்பட்ட உலகில் எல்லை தாண்டிய திறமை பரிமாற்றம் மிகவும் முக்கியமானது. அவர்கள்தான் உலகின் தொழில்நுட்பம் மற்றும் பொரு ளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற் றுகிறார்கள்.

உலகம் முழுவதும் உள்ள திறமை யானவர்களை சீனா வரவேற்கிறது. பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் அவர்கள், மனிதகுலத்தின் முன்னேற்றம் மற்றும் தொழில் துறை வெற்றிக்காக சீனாவில் கால் பதிக்க வேண்டும்.” என தெரிவித்துள்ளார்.









# நான் சேர்த்து வைத்துள்ள மக்கள் என்ற சொத்து எல்லா சொத்துக்களையும் விட பெறுமதியானது

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

“நான் சேர்த்துள்ள மக்கள் என்ற சொத்து மற்ற எல்லா சொத்துக்களையும் விடவும் பெறுமதி வாய்ந்தது. பல மக்களை சம்பாதித்துள்ளமையே எனக்கு மிகப்பெரிய மகிழ்ச்சி.”

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் இதனை குறிப்பிட்டுள்ள அவர் கார்ல்டன் இல்லத்தில் தமது சகோதரர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது மனைவி அயோமா ராஜபக்ஷ தம்மை சந்திக்க வந்ததையிட்டு மகிழ்ச்சியடைவதாக குறிப்பிட்டுள்ளார்.

“லெப்டினன்ட் கேணலாகவும், பாதுகாப்பு செயலாளராகவும், பின்னர் உயிர்களை காப்பாற்றிய ஜனாதிபதியாகவும் இருந்த கோட்டாபயவால் நான் கௌரவிக்கப்படுகிறேன். அவர் எப்போதும் மக்களை பாதுகாத்தார் என்பதில் எனக்கு பெருமை.” என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச குறித்து நினைவுகூர்ந்த அவர், “மூன்று தசாப்தங்களுக்கு மேல், நாட்டை அழித்த பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டமை என் வாழ்நாளின் மிக மகிழ்ச்சியான செய்தியாகும். அந்த தருணத்தில் விமல் எனக்கு அருகில் இருந்தார். அந்த மகிழ்ச்சியை நாங்கள் புன்னகையுடன் பகிர்ந்து கொண்டோம்.” என்று குறிப்பிட்டார்.

அதேநேரம், கடந்த சில நாள்களாக கார்ல்டன் இல்லத்துக்கு வரும் மக்களுடன் அரட்டை அடித்து மகிழ்ந்ததாகவும், மக்களின் புன்னகை தான் உண்மையான சொத்து எனவும் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.



# அரசாங்கம் வாக்குறுதிகள் தொடர்பில் சுயமதிப்பீடு செய்து கொள்ள வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு




"ஒரு வருடம் கழிந்தும் கடந்த காலம் பற்றி மட்டுமே பேசுவதில் பயனில்லை. அரசாங்கம் தங்களது வாக்குறுதிகள் தொடர்பில் சுயமதிப்பீடு செய்து கொள்ள வேண்டும்."

– இவ்வாறு நாடாளுமனற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த கால அரசாங்கங்கள் செய்த தவறுகளை ஆராய்வதை விடுத்து தங்களது வாக்குறுதிகளில் எத்தனை நிறைவேற்றப்பட்டுள்ளன அது எந்தளவு பயனளித்தது என அரசாங்கம் சுயமதிப்பீடு செய்ய வேண்டும்.

வளமான நாடு அழகான வாழ்க்கை என்ற கோஷத்துடன் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

இன்று மக்கள் வளப்படுத்தப்படவில்லை மாறாக 159 பேரும் கோடிஸ்வரர்களானமை இன்று பேசுபொருளாகியுள்ளதை காணமுடிகிறது.

75 வருட சாபத்தினால் செல்வந்தர் ஆகமுடியாதோர் கடந்த வருடத்தில் செல்வந்தர்களாகியுள்ளனர்.

அதேநேரம், கடந்த ஒரு வருடத்தில் பொருளாதாரம் வீழ்ச்சி பாதையில் சென்றுள்ளது

காய்கறி செய்கை 3.6 சதவீதத்தினால் குறைந்ததுடன் கிழங்கு, வெங்காயம் விளைச்சல் அதிகரிக்கும் காலத்தில் அவற்றை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேநேரம், கடற்றொழில் செயற்பாடும் 34 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது, இது குறித்து அவதானம் செலுத்தாவிடின் வெளிநாட்டிலிருந்து மீன்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்படக்கூடும்.

அத்துடன், இறப்பர் தொழிற்துறையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இவை அனைத்து தொகை மதிப்பு புள்ளிவிபர திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களாகும்.

இதுவே ஒரு வருடத்தில் அரசாங்கம் பெற்றுக்கொண்ட வெற்றியாகும். மின்சாரத்துறை ஊழியர்களுக்கு அரசாங்கம் அநீதி இழைத்துள்ளது.

80 களில் செயற்பட்டதை போல இன்றும் செயற்பட முடியாது, காவல்துறை,நீதிமன்றத்தை காட்டி அச்சுறுத்திய காலம் முடிவுக்கு வந்துவிட்டது. அவ்வாறு அரசாங்கத்தை கொண்டு செல்ல முடியாது.

தொழிற்சங்க நடவடிக்கைக்கு அன்று இணங்காத ஆசிரியர்களை, அரசாங்கம் ஆட்சிக்கு வந்து பழிவாங்குகிறது.

எனவே, அடக்குமுறைகளை கைவிட்டு அரசாங்கம், மக்களுக்கு தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்" – என்றார்.

# மின்சார ஊழியர்களின் விடுமுறைகள் இரத்து




மின்சார சபையின் அனைத்து ஊழியர்களின் விடுமுறைகளும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்கு தொடர்ச்சியான மின் விநியோகத்தை உறுதி செய்வதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே, மின்விநியோகத்துடன் தொடர்புடைய அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து கடந்த 21 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது.

1979ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டத்தின் 2ஆம் பிரிவிற்கமைய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மக்களின் இயல்பு வாழ்க்கையை நடத்திச்செல்ல குறித்த சேவைகள் அத்தியவசியமானவை என்பதையும் அந்த சேவைகளுக்கு இடையூறு அல்லது தடை ஏற்படக்கூடும் என்பதை கருத்திற்கொண்டும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

24 கோரிக்கைகளை முன்வைத்து எதிர்க்கட்சிகளுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்களுடன் பொறியியலாளர் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் கடந்த 25ஆம் திகதி முதல் சுகவீன் விடுமுறை, சட்டப்படி வேலைசெய்யும் தொழிற்சங்க நடவடிக்கை மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றன.

தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையின் மூன்றாவது கட்டமாக அனைத்து பெறுகை செயற்பாடுகளிலிருந்தும் விலகியுள்ளதாக இலங்கை மின்சார சபையின் மின்சார தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.









# வடக்கு ஆளுநர் வேதநாயகனுடன் ஆசிரியர் சேவைச் சங்கம் சந்திப்பு



இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் மற்றும் இலங்கை அதிபர் சேவைச் சங்கம் என்பனவற்றுக்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகளை இன்னும் விரைவாக முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இதேவேளை, ஒழுக்காற்று விசாரணைகளும் அதிகரித்துச் செல்வதாகவும் கல்வி அமைச்சின் செயலரால் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், வலய இடமாற்றச் சபையில் இருக்கும் தொழிற்சங்கத்தின் அதே பிரதிநிதி மேன்முறையீட்டுச் சபையிலும் அங்கம் வகிப்பது சட்டமுரணானது என பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க குறிப்பிட்டார்.

மேலும், ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கொள்கையை விரைவாகத் தயாரிக்குமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது 2027ஆம் ஆண்டு இடமாற்றத்திலிருந்து நடைமுறையாகும் எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

அதிபர்களுக்கான இடமாற்றக் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளபோதும் அதனுடன் தொடர்புடைய தொழிற் சங்கங்களுடன் கலந்துரையாடப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டமையடுத்து, தொடர்புடைய தொழிற்சங்களுடன் கலந்துரையாடிய பின்னர் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

அதேநேரம் தற்போது வழங்கப்பட்ட ஆசிரிய இடமாற்றங்களுக்கு அமைவாக வலயக் கல்விப் பணிப்பாளர்களால் விடுவிப்பு வழங்கப்பட்ட பின்னரும் அதே பாடசாலைகளில் கையெழுத்திட அனுமதிக்கும் அதிபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளால் கேள்வி எழுப்பப்பட்டது. வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அதிபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறினால் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆளுநரிடம் வலியுறுத்தினர்.

அதேநேரம், மாகாண ரீதியாக சில பாடங்களுக்கு ஆசிரிய ஆளணி மேலதிகமாக உள்ளது. அத்தகைய பாடங்களுக்கு எந்தவொரு பாடசாலைகளிலும் ஆசிரிய வெற்றிடம் இருக்கக்கூடாது. இதை சீர் செய்யுமாறு தொழிற்சங்கப் பிரதிநிதிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்கு அமைவாக இரு வாரங்களுக்கு இதனைச் சீர் செய்யுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களை ஆளுநர் பணித்தார்.

மேலும், வடக்கு மாகாணத்தை சொந்த இடமாகக் கொண்டு வெளி மாகாணங்களில் நீண்ட காலம் கற்பிக்கும் ஆசிரியர்களை மாகாணத்துக்குள் உள்வாங்குவதற்கான பொறிமுறை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இறுதியாக மேற்கொள்ளப்பட்ட அதிபர் நியமனங்களில் இன்னமும் கடமைகளைப் பொறுப்பேற்காத அதிபர்களின் விவகாரமும் ஆராயப்பட்டது. இது தொடர்பில் குழு நியமித்து அதன் முடிவை ஆளுநருக்கு அறிவிப்பதென்று கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் ஆசிரியர்கள் ஓய்வுபெற்ற பின்னரும் அவர்களின் ஓய்வூதியம் இழுத்தடிக்கப்படுவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. ஆசிரியர்கள் ஓய்வு பெறுவதற்கு 6 மாதங்களுக்கு முன்னரே அவர்களது கோவைகளைப் பார்வையிட்டு ஓய்வுபெற்று ஒரு மாதத்துக்குள் அவர்களுடைய ஓய்வூதியம் கிடைப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்ய வேண்டும் என ஆளுநர் அறிவுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பொதுச் செயலாளரும் பிரதி அமைச்சருமான மஹிந்த ஜயசிங்க, இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் தேசிய அமைப்பாளரும் பிரதி அமைச்சருமான பிரதீப் சுந்தரலிங்கம், ஆசிரியர் சேவைச் சங்கத்தின் உப தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெகதீஸ்வரன் ஆகியோரும், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை.ஜெயசந்திரன், வடக்கின் அனைத்து வலயங்களினதும் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.













# தாமரை கோபுரத்தில் பங்கீ ஜம்பிங் திட்டம்



கொழும்பு தாமரை கோபுரத்தில் அடுத்த ஆண்டுக்குள் பங்கீ ஜம்பிங் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்துடன், பங்கேற்பாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அதிகபட்ச பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கொழும்பு தாமரை கோபுரத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காகப் பாதுகாப்புப் பணியாளர்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், கண்காணிப்பு கெமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலகத் தமிழ், சிங்கள கலைப் பண்பாட்டு விழா; இந்தியா, இலங்கையின் கலைஞர்கள் பங்கேற்பு



உலகத்தமிழ் கலை பண்பாட்டுக் கலைக்கூடம் சர்வதேச அமைப்பின் ஏற்பாட்டில், இந்தியா மற்றும் இலங்கையின் பாரம்பரியக் கலைகளைப் போற்றும் மாபெரும் கலாச்சார விழா எதிர்வரும் டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி இலங்கையின் தலைநகரான கொழும்பில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில், இந்தியாவிலிருந்து சுமார் பத்து முன்னணிப் பாடகர்கள் பங்கேற்று, தமிழ் திரைப்படப் பாடல்களைப் பாட உள்ளனர். இவர்களுடன், இலங்கையின் ஹட்டன் சலீம் உள்ளிட்ட பிரபல பாடகர்களும் தங்கள் இசைத் திறனை வெளிப்படுத்த உள்ளனர்.

இந்தக் கலாச்சார விழா, தமிழ் மற்றும் சிங்கள கலை வடிவங்களைஒருங்கிணைத்து,இருநாடுகளுக்குமிடையிலானநட்புறவை வலுப்படுத்தும் வகையில் அமையப்பெறவுள்ளதுடன். குறிப்பாக, அழிந்துவரும் பாரம்பரியத் தமிழ் கலைகளை மீட்டுருவாக்கம் செய்யும் வகையில், தமிழ்நாட்டிலிருந்து அரசுப் பள்ளி மாணவ மாணவிகள் பங்கேற்று சிறப்பு நடனங்களை அரங்கேற்ற உள்ளனர்.

இந்த நிகழ்வில், இலங்கையின் முக்கிய அமைச்சர்களும் சமூகப் பெரியோர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ள உள்ளனர்.

இது குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றது. இதன் போது, உலகத்தமிழ் கலை பண்பாட்டுக் கலைக்கூடத்தின் சர்வதேசத் தலைவர் கலாநிதி எஸ்.எம். ரஷ்மி ரூமி கூறுகையில்,

“இந்த விழா, இந்தியா மற்றும் இலங்கையின் கலை மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியத்தை இணைக்கும் ஒரு சிறப்பான நிகழ்வாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகங்களும் இல்லை. அத்துடன் எங்கள் அமைப்பு சார்பாக, எனது தந்தை மறைந்த இஸ்லாமியப் பாடகரும், திரையிசைப் பாடகருமான ”சங்கநாத செம்மல் காயில் ஷேக் முகமதுவின் “மகா காவியப் புத்தகம்” டிசம்பர் 16ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதோடு அதனை பிரபல எழுத்தாளர் மூதூர் அனஸ் மற்றும் துணை எழுத்தாளர் முகைமினா ஆகியோர் எழுதியுள்ளனர்,” என்று தெரிவித்தார்.

இந்தியா மற்றும் இலங்கையின் கலாச்சாரப் பிணைப்புகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் அமையப்பெற்றுள்ள இந்த விழா, இரு நாட்டு மக்களின் கலை ஆர்வத்தையும் ஒருங்கிணைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உலகத்தமிழ் கலை பண்பாட்டுக் கலைக்கூடத்தின் சர்வதேச அமைப்பின் இலங்கை செயலாளர் பாடகர் ஹட்டன் சலீம் மற்றும் உலகத் தமிழ் கலை பண்பாட்டுக் கலைக்கூடத்தின் சர்வதேச அமைப்பின் இலங்கை துணைத்தலைவர் அல்ஹாஜ் முஹம்மது நிசாம் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# ஆண்டின் முதல் 8 மாதங்களில் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

2025 ஆம் ஆண்டின் முதல் 8 மாதங்களில், நாட்டின் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

இதன்படி, 11,554.32 மில்லியன் அமெரிக்க டொலராக ஏற்றுமதி வருமானம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது கடந்த 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 6.61 வீத வளர்ச்சியாகும்.

அத்துடன், 2025ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் வணிகம் மற்றும் சேவைத் துறைகளில் மொத்த ஏற்றுமதி வருவாய் 1,607.58 மில்லியன் அமெ



ரிக்க டொலராக பதிவானது.

2024 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடும்போது இது 2.57 வீத வருடாந்திர வளர்ச்சியாகும்.

# இன்றைய ராசி பலன்கள் -24.09.2025




உங்கள் ஆற்றலை குறைக்கும் விதத்தில் உங்கள் மனதில் அவநம்பிக்கையான உணர்வுகள் தோன்றும்.நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் செயல்பட்டால் நீங்கள் சாதகமான பலன்களைப் பெறலாம்.

இன்று பணிச்சுமை கடினமாக காணப்படும்.இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.ஆரோக்கியக் குறைபாடு காரணமாக உங்கள் பணிகளை விரைந்து ஆற்ற இயலாது.

நீங்கள் ஆவேசமான மன நிலையில் காணப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே அதனை தவிர்ப்பது நல்லது.

இன்று குறைவான பண வளர்ச்சி காரணமாக குறைந்த பண வரவு காணப்படும். பணத்தை திறமையுடன் கையாள வேண்டியது அவசியம்.

உங்கள் தாயின் உடல் நலனுக்காக நீங்கள் பணத்தை செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.




இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.உங்களின் மனநிலையின் மூலம் இது சாத்தியம். உங்கள்நோக்கம் நிறைவேறும் வகையிலான நல்ல முடிவுகளை நீங்கள் எடுப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் உறுதி காரணமாக உங்கள் பணியில் முன்னனியில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்ப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசி இன்றைய நாளை சந்தோஷமாக கழிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் போதுமானதாக இருக்கும். பணத்தை உங்கள் சொந்த தேவைக்கு பயன்படுத்துவீர்கள் மற்றும் சேமிப்பீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் நம்பிக்கையுணர்வு காரணமாக ஆரோக்கியமாக இருபதாக உணர்வீர்கள்.




இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும் நாள்.எந்த முயற்சி எடுத்தாலும் அதை குறித்த நேரத்தில் முடிப்பது சிறிது கடினமாக இருக்கும்.நீங்கள் பிறரிடம் உரையாடும் போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின்பணிச்சூழல் மகிழ்ச்சி அளிப்பதாக காணப்படாது.உங்களின் கடின உழைப்பிற்காக நல்ல பெயரை பெற முடியாத சூழல் காணப்படும்.

உங்கள் துணையால் நீங்கள் புறக்கணிக்கப் படுவது போல உணர்வீர்கள். இம்மாதிரியான உணர்வுகளை தவிர்த்து இன்றைய நாளை சந்தோஷமான நாளாக ஆக்குங்கள்.

அதிகரிக்கும் குடும்ப பொறுப்புகள் காரணமாக இன்று அதிகமாக செலவு செய்ய நேரும்.

உங்கள் தந்தையின் உடல் நலனுக்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.




இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக்காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.

தோல் அரிப்பு மற்றும் களைப்பு காரணமாக ஏற்படும் போதிய தூக்கமின்மை உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று சிறந்த நாளாக இருக்கும். நீங்கள் இன்று விரைந்து செயலாற்றுவீர்கள். இதனால்திருப்தி ஏற்படும். இன்று பயணங்களால் ஆதாயம் ஏற்படும். இன்று வளர்ச்சி பெறுவது உறுதி.

இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மும்மரமாக ஈடுபடுவீர்கள். உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள்.

உங்கள் நலன் குறித்த முக்கிய முடிவு எடுக்க உங்கள் துணை உங்களுக்கு வழி காட்டுவார். இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். நிதி நிலை சுதந்திரமாக இருக்கும். பணத்தை நகை மற்றும் ஆடம்பர பொருட்கள் வாங்குவதற்கு பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

இன்று உங்களிடம் ஆற்றல் மற்றும் தைரியம் நிறைந்து காணப்படும். இதனால் நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று உங்களுக்கு முன்னேற்றம் எளிதில் கிடைக்கும்.சிறிதளவு முயற்சியாயினும் வெற்றி நிச்சயம்.உங்கள் திறமை வெளிஉலகத்தில் பளிச்செனத் தெரியும்.இன்று தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

இன்று பணிகள் மிக அதிகமாக இருப்பதைக் காண்பீர்கள். உங்கள் திறமைகளை வெளிப்படுத்த புதிய வாய்ப்புகளுக்கு நீங்கள் முயலலாம்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து பேசுவீர்கள். இது உங்கள் துணையை திருப்திபடுத்தும்.

இன்று உங்களிடம் பணம் மிகுதியாக காணப்படும். அதை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் தைரியம் மற்றும் திருப்தி காரணமாக உங்கள் ஆரோக்கியம் இன்று சிறப்புடன் காணப்படும்.




இன்று சிறந்த வளர்ச்சி காணப்படும்.உங்கள் சிறிய முயற்சியின் மூலம் பெரிய வெற்றி காண்பீர்கள்.இன்று நீங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணி சம்பந்தப்பட்ட முக்கியமான சந்திப்பில் நீங்கள் மூழ்கியிருப்பீர்கள்.இந்த சந்திப்பில் உங்கள் உரையாடலைக் கண்டு உங்கள் சகபணியாளர்கள் ஆச்சரியமடைவார்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் பழகுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று சீரான ஆரோக்கியம் காணப்படும். தேக ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.




இன்று அசௌகரியங்கள் காணப்படும்.அதற்கு உங்கள் மனஅழுத்தங்கள் காரணமாக இருக்கலாம்.மன அழுத்தத்தைக் குறைக்க நல்ல இசையை கேட்பது திரைப்படங்கள் பார்ப்பது போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுங்கள்.மகிழ்ச்சி கிடைக்கும்.

உங்கள் பணிகளை சமாளிப்பது கடினமாக காண்பீர்கள்.எனவே திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றிக்கு வழி கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணச்சிவசப்படுவீர்கள். இது உறவில் அமைதியையும் நல்லினக்கதையும் பாதிக்கும்.

இன்று பணத்தை கையாள்வது கடினமாக இருக்கும். பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

# இன்றைய ராசி பலன்கள் -24.09.2025




இன்று மந்தமாக காணப்படு வீர்கள்.சுறுசுறுப்புடன் இருக்க வேண் டியது அவசியம்.நல்லதையே நினை யுங்கள்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில ஏமாற்றங்களோ அல்லது தடைகளோ காணப்படும்.உங்கள் சக பணியாளர்களுடனான உங்கள் தொடர்பாடல் நற்பலன்களை அளிக்காது.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. இதனை தவிர்த்து நட்புடன் பழ குவது நல்லது.

இன்று செலவுகள்தவிர்க்க முடியாது. எனவே செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது. முதுகு வலி மற்றும் இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று துடிப்பான நாளாக இருக் கும்.உங்கள் இலட்சியங்களை அடை வதற்கு உகந்த நாள்.நீங்கள் உங் களுக்கென சில செயல்களை அமைத்துக் கொண்டு அதில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.கடினமான பணிகளைக் கூட எளி தாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் பழகுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் நல்ல காரியங்களுக்கு பயன் செய்வீர்கள்.

இன்றைய நாள் உங்களுக்கு சௌகரியங்கள் வழங்கும் என்பதால் நீங்கள் இன்று நல்ல ஆரோக் கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும்.நீங்கள்செய்யும் செயல்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக முடியும்.நீங்கள் நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக் கும்.உங்கள் திறமைகள் பாராட்டைப் பெறும்.உங்கள் செயல்திறன் மூலம் உங்களுக்கு கூடுதல் நன்மைகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான நினைவுகளை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். இன்று உங்களிடம் காணப்படும் அதிகப்படியான ஆற் றல் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்புடன் வைத்திருக் கும்.




இன்று குறைந்த பலன்களே கிடைக் கும்.இன்று சில ஏமாற்றங்களைக் காண்பீர்கள்.எல்லாவற்றையும் நட்பு முறையோடு அணுகுங்கள்.

நீங்கள் அதிகமாக பணியாற்ற வேண் டியிருக்கும்.அது உங்களுக்கு கவ லையை உண்டாக்கும்.பணியாற்றும் முறையை திட்டமிட்டுஅதற்கேற்றாற் போல செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். இனிமையான வார்த்தைகளைப் பேச வேண்டும். துணையின் விருப்படி நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்பு கள் உள்ளது. பணத்தை கவனமுடன் கையாள வேண்டும்.

உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். உங்கள் குழந்தைக்கு தோள்கள் மற்றும் கணுக்கால்களில் வலி ஏற்படலாம்.

# நாட்டின் பல பகுதிகளில் 50 மில்லி மீற்றர் மழை



எதிர்வரும் 24 மணி நேரத்திற்குள் நாட்டின் பல பகுதிகளில் 50 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதி வாகக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக் கையில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் சில இடங்களிலும் மழை பெய்யக்கூடும்.

அத்துடன் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், திருகோணமலை மற்றும் அம்பாந் தோட்டை மாவட்டங்களிலும் மணிக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.